செ.வெ.எண்:8 நாள்: 05.02.2020

**பத்திரிக்கைச்செய்தி**

கரூர் மாவட்டத்தில் பொது விநியோகத்திட்டத்தில் நியாய விலை அங்காடிகள் சம்பந்தமான குறைபாடுகள், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், பெயர் திருத்தம், புதிய குடும்ப அட்டை கோருதல் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் தொடர்பான பொது மக்களின் குறைகளை களைவதற்கு பிப்ரவரி 2020–ஆம் மாதத்திற்கான பொது விநியோகத்திட்ட குறைதீர் நாள் கூட்டம் 08-02-2020–ஆம் தேதி கரூர் வட்டம், வெள்ளியணை குறுவட்டத்தில், சணப்பிரட்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், அரவக்குறிச்சி வட்டம், அரவக்குறிச்சி குறு வட்டத்தில், நாகம்பள்ளி ஊராட்சி மன்ற அலுவலகத்திலும், மண்மங்கலம் வட்டம், மண்மங்கலம் குறுவட்டத்தில், மின்னாம்பள்ளி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், புகளூர் வட்டம் , க.பரமத்தி குறுவட்டம், க.பரமத்தி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், குளித்தலை வட்டம், நங்கவரம் குறுவட்டத்தில், நங்கவரம் வடக்கு(II) கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், கிருஷ்ணராயபுரம் வட்டம், கட்டளை குறுவட்டத்தில், ரெங்கநாதபுரம் வடக்கு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், கடவூர் வட்டம், கடவூர் குறுவட்டத்தில், ஆதனூர் கிராமம் எருதிக்கோன்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் தலைமையில் நடைபெறுகிறது.

எனவே, பொதுமக்கள் மேற்படி குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு பொது விநியோகத்திட்டம் தொடர்பான தங்களது குறைகளை தீர்வு செய்து கொள்ளலாம் எனவும், தற்போது பழைய குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக மின்னனு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருவதால் இதுவரை மின்னணு குடும்ப அட்டைகள் பெறாத குடும்ப அட்டைதாரர்கள் இக்கூட்டத்தினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.